# மக்கள் சாசனம்

# 2011–2012

# ஆதிதிராவிடர் நலத்துறை

## 1. கல்வி உதவித் தொகை

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|---|
| 1.1 | 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை. | பள்ளி மற்றும் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத (Non refundable fees) அனைத்துக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புத் தொகை ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.<br><br>**விடுதியில் அல்லாதோர்**<br>மாதம் ரூ.230/– முதல்<br>ரூ.550/– வரை.<br><br>**விடுதியில் உள்ளோர்.**<br>மாதம் ரூ.380/– முதல்.<br>ரூ.1200/– வரை. | 11ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர் மட்டும். ஆண்டு வருமான வரம்பு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ.2,00,000/–க்குள் (அனைத்து வகை வருமானமும் சேர்த்து கணக்கிடப்படும்). | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள். மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். பிற மாநிலங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் ஆணையரின் நேர்முக உதவியாளரை அணுக வேண்டும். |
| 1.2 | மத்திய அரசு ப்ரிமெட்ரிக் (Pre-Matric) கல்வி உதவித் தொகை. (துப்புரவு தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை). | **விடுதியில் அல்லாதோர்**<br>1 ஆம் வகுப்பு முதல்.<br>10 ஆம் வகுப்பு வரை.<br>மாதம் ரூ.110/–<br><br>**விடுதியில் தங்கி பயில்பவர்கள்.**<br>3ஆம் வகுப்பு முதல்<br>10 ஆம் வகுப்பு வரை<br>மாதம் ரூ.700/–<br><br>**தனி மானியம்.**<br>**விடுதியில் அல்லாதோர்**<br>ஆண்டுக்கு ரூ.750/–<br><br>**விடுதியில் உள்ளோர்**<br>ஆண்டுக்கு ரூ.1000/– | துப்புரவுத் தொழில் செய்வோர், தோல் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள் சாதி மத பேதம் இல்லை ஆண்டு வருமான வரம்பு இல்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.<br><br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.3 | **உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை.**<br><br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள். | பட்டப்படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.6500/–<br>பட்டமேற்படிப்பு மற்றும் தொழில் படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.7000/– மானியமாக வழங்கப்படுகிறது. | ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம் | கல்லூரி முதல்வர்கள். மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |
| 1.4 | 10 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு தேர்வுக் கட்டணம். | தேர்வுக் கட்டணம், அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது. | ஆண்டு வருமான வரம்பு இல்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள். |
| 1.5 | கற்பிப்புக் கட்டணம் பல்கலைக் கழகங்களுக்கு ஈடு செய்தல் (ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள்). | அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் 12ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புக்கு ஈடு செய்யப் படுகிறது. சுயநிதித் கல்வி நிறுவனங்களுக்கு அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் விதிக்கப்படும் கல்விக் கட்டண அளவிற்கு வழங்கப்படுகிறது. | ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம் | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5. |

## 2. இலவசக் கல்வித் திட்டம்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|---|
| 2.1 | பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்/ மாணவியர்கள் | தேர்வுக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் வழங்கப்படும். | ஆண்டு வருமான வரம்பு இல்லை. | கல்லூரி முதல்வர்கள். |
| 2.2 | இலவசக் கல்வித் திட்டம் பட்டமேற்படிப்பு (P.G) மாணவியர் மட்டும். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் (மாணவியர் மட்டும்.) | தேர்வுக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் வழங்கப்படும். | ஆண்டு வருமான வரம்பு இல்லை. | கல்லூரி முதல்வர்கள். |
| 2.3 | வெளிநாட்டில் மேல்படிப்பினை தொடரும் மாணவ/மாணவியர் களுக்கு கல்வி உதவித் தொகை. | வெளிநாட்டில்<br>(அ) ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு (For Post Doctoral)<br>(ஆ) ஆராய்ச்சி படிப்பு (For Ph.D).<br>(இ) பட்டமேற்படிப்பு<br>(For Master Degree)<br>மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்கப்படும். | ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சம்<br><br>வயது வரம்பு 35க்குள். குடும்பத்தில் ஒருவர். | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.4 | மாநில அரசு ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/மாணவியர். | சிறப்புக் கட்டணம் ஈடு செய்யப்படும். | ஆண்டு வருமான வரம்பு இல்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள். |
| 2.5 | மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ மாணவியர். | **விடுதியில் அல்லாதோர்**<br>மாதம் ரூ.65/– முதல் ரூ.125/– வரை.<br><br>**விடுதியில் தங்கி பயில்பவர்கள்.**<br>மாதம் ரூ.115/– முதல் ரூ.280/– வரை. | ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம். | பள்ளித் தலைமை ஆசிரியர்கள். கல்லூரி முதல்வர்கள். மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |

## 3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ / மாணவியர்க்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| **3.1** | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்க்கு சிறப்பு பயிற்சி அளித்தல் | | வருமான வரம்பு இல்லை | பள்ளித் தலைமை ஆசிரியர் |

## 4. மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவச உதவித் திட்டங்கள்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 4.1 | பாடப்புத்தகங்கள் | ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்க்கும். | –– | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |
| 4.2 | குறிப்பேடுகள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உண்டு உறைவிடப் பள்ளிகளில் 3 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ / மாணவியர் மற்றும் பொதுப் பள்ளிகளில் 4 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவ மாணவ / மாணவியர். | –– | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 4.3 | சீருடை | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டுஉறைவிடப் பள்ளிகளில் ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர் (ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் உட்பட). | —— | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர்/விடுதி காப்பாளர் / காப்பாளினி. |
| 4.4 | மிதிவண்டி | அரசு / அரசு உதவிப் பெறும் பள்ளிகள் / பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் (சுய உதவியுடன்) +1, +2 வகுப்புகள் நடத்தப் பெறுபவை) +1, +2 பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர். | —— | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |
| 4.5 | திறன் மிக்க பள்ளிகளில் 11ம் வகுப்பில் மாணவ / மாணவியரைச் சேர்த்தல். | ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு/ நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகளில் 10ம் வகுப்பு பயின்று முதல் பத்து தர வரிசை பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவ / மாணவியர். | பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– . ஒரு ஆண்டுக்கு தங்கும் செலவு உட்பட ரூ.28,000/– ஒரு மாணவருக்கு வழங்கப்படும். | மாவட்ட ஆட்சித் தலைவர்கள். |
| 4.6 | திறன் மிக்க பள்ளிகளில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் கிறித்துவ மதம் மாறிய மாணவ/ மாணவியரை 6ம் வகுப்பில் சேர்த்தல். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியரை நுழைவு தேர்வு மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்து ஒரு மாணவர் / மாணவி வீதம் தேர்ந்தெடுத்து 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை திறன் மிக்க பள்ளிகளில் சேர்த்து பயில வைத்தல். இதற்கான மொத்தச் செலவையும் அரசே ஏற்கும். | —— | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

## 5. ஊக்க தொகை பரிசுகள்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| | பரிசுகள் | 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக சதவீத மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில/மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. | தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகம். |

## 6. பெண்கல்வியை ஊக்குவிக்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 6.1 | **3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கான திட்டம்.**<br>கல்வியில் பின்தங்கியுள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், கரூர், நாகப்பட்டினம் ஆகிய 16மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கும் மாநிலம் முழுவதும் (சென்னை தவிர) பழங்குடியின பெண் குழந்தைகளுக்கும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்.<br>3 முதல் 5ம் வகுப்பு பயிலும் 80,000 பேர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500/– (ரூ.50/– வீதம் 10 மாதங்களுக்கு). | ஆதிதிராவிடர் / பழங்குடியின பெண் குழந்தைகளின் பள்ளி சேர்க்கையை அதிகரிக்க மாதம் ஒன்றிற்கு ரூ.50/– வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.<br>1. 3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பெண் குழந்தைகள்.<br>2. வருமான வரம்பு இல்லை.<br>3. கிராமப்புற பள்ளிகளில் கல்வி பயில வேண்டும். | வருமான வரம்பு இல்லை | தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 6.2 | 6ம் வகுப்பு பயிலும் 40,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/– (ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கு) | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவிகள் படிப்பை இடையில் விட்டுச் செல்லும் நிலையைத் தவிர்க்க ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கு 6ம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) வழங்கப்படுகிறது.<br>1. 6ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பெண் குழந்தைகள்.<br>2. வருமான வரம்பு இல்லை.<br>3. கிராமப்புற பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவிகளாக இருக்க வேண்டும். | வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.3 | சிறப்பு வழிகாட்டி மற்றும் வினாவங்கி | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் | -- | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / விடுதிக் காப்பாளர் / காப்பாளினிகள் |

## 7. முதலமைச்சர் தகுதி பரிசுத் தொகை

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| | 12ம் வகுப்பு தேர்வில் முதன்மை மதிப்பெண்கள் பெறும் 1000 மாணவர்கள் மற்றும் 1000 மாணவியர்கள் தொடர்ந்து பயின்றால் 5 ஆண்டுகள் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ.1500/– வீதம் வழங்கப்படும். | 12ம் வகுப்பு தேர்வில் முதல் 1000 இடங்களுக்குள் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். மேற்படிப்பைத் தொடர வேண்டும். ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்களில் முதல் 1000 மாணவர் மற்றும் முதல் 1000 மாணவியர்க்கு இப்பரிசு வழங்கப்படும். | வருமான வரம்பு இல்லை. | மேற்படிப்பு பயிலும் மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |

## 8. மாநில அளவிலான பரிசுத் தொகை

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| | 12ம் வகுப்பு ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி. | முதலிடம் பெறுபவருக்கு ரூ.50,000/–<br><br>2ம் இடம் பெறுபவருக்கு ரூ.30,000/–<br><br>3ம் இடம் பெறுபவருக்கு ரூ.20,000/– | மாநில அளவில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவர்கள் மற்றும் மாணவிகள். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

## 9. பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில அளவில் முதன்மை

| | | | | |
|---|---|---|---|---|
| | மாநில அளவில் பாட முதன்மை 25 பாடங்கள் (12ம் வகுப்பு). | மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு. | மாநில அளவில் பாட முதன்மை பெறுபவருக்கு ரூ.2000/– வீதம். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

## 10. மாநில அளவிலான பரிசுத் தொகை

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 10.1 | 10ம் வகுப்பு ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஒவ்வொரு இனத்திலும் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி. | மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய இனங்களில். | மாநில அளவில் முதன்மை ரூ.25,000/–<br><br>மாநில அளவில் 2ம் இடம் ரூ.20,000/–<br><br>மாநில அளவில் 3ம் இடம் ரூ.15,000/– | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |
| 10.2 | மாநில அளவில் பாட முதன்மை 5 பாடங்கள் (10ம் வகுப்பு). | மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு. | மாநில அளவில் பாட முதன்மை பெறுபவருக்கு ரூ.1000/– வீதம். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

## 11. மாவட்ட அளவிலான பரிசுத் தொகை.

| | | | | |
|---|---|---|---|---|
| | மாவட்ட அளவிலான பரிசுத் தொகை. | **12ம் வகுப்பு**<br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி. | மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ரூ.3000/– | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |
| | | **10ம் வகுப்பு.**<br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெறுபவர்கள். | மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ரூ.1000/–<br><br>மாவட்ட அளவில் இரண்டாம் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ரூ.500/–<br><br>மாவட்ட அளவில் மூன்றாம் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ரூ.300/– | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

## 12. பரிசுத் தொகை திட்டம்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| | பரிசுத் தொகை திட்டம் | பட்டபடிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் படிப்புகளில் 60% மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றிருக்க வேண்டும். தொடர்ந்து படிப்பு மேற்கொள்ள வேண்டும். ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தவராக இருக்க வேண்டும். வருமான வரம்பு இல்லை. | பட்டபடிப்பு மாணவர்களுக்கு ரூ.2000/–<br><br>பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு ரூ.4000/–<br><br>தொழிற்கல்வி மாணவர்களுக்கு ரூ.5000/– | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |
| 12.1 | அறிவுக்கூர்மை பரிசுத் தொகை. | ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மற்றும் 2ம் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/– அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ரூ.960/–ம் வழங்கப்படுகிறது. | 10ம் வகுப்பில் மாவட்டத்தில் முதல் மற்றும் 2ம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும். வருமான வரம்பு இல்லை. | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |
| 12.2 | காந்தி நினைவு பரிசு | ஒவ்வொரு பாடத்திலும் 12ம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் ஒரு மாணவிக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.1500/–ம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.1000/–வீதம் வழங்கப்படும். | 12ம் வகுப்பில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |
| 12.3 | தகுதி வழிவகை பரிசு. (காந்தி நினைவு பரிசு போன்றே இப்பரிசும் வழங்கப்படும்). | ஒவ்வொரு பாடத்திலும் 12ம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர். முதல் ஆண்டு ரூ.1500/– அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.1000/– வீதம் வழங்கப்படும். | 12ம் தேர்வில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 12.4 | டாக்டர் அம்பேத்கர் தேசிய தகுதி கல்வி உதவித் தொகை. | **10ம் வகுப்பில்** மாநில அளவில் முதல் 3 மதிப்பெண் பெறும் மாணவர்கள்<br>முதல் பரிசு – ரூ.60,000/–<br>2ம் பரிசு – ரூ.50,000/–<br>3ம் பரிசு – ரூ.40,000/–<br><br>**12ம் வகுப்பில்** மாநில அளவில் முதல் 3 மதிப்பெண் பெறும் மாணவர்கள் அறிவியல், கலை பிரிவுகள்.<br><br>முதல் பரிசு – ரூ.60,000/–<br>2ம் பரிசு – ரூ.50,000/–<br>3ம் பரிசு – ரூ.40,000/– | ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் குடும்ப வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு குறைவாக.<br><br>ஆதிதிராவிடர் குடும்ப வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல். | நியூடெல்லி அம்பேத்கர் பவுண்டேஷனின் இயக்குநர். தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் மூலமாக.<br><br>இயக்குநர், நியூடெல்லி அம்பேத்கர் பவுண்டேஷன் தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியம் மூலமாக. |

## 13. வேலைவாய்ப்புக்கான சிறப்பு பயிற்சி.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 13.1 | இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி–ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., போன்ற படிப்புகளுக்கு பயிற்சி அளித்தல். | இந்திய குடிமைப்பணி (ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்) தேர்வு எழுத முன்னோடி பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி அளித்தல். | மாணவர்களது பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம். பட்டப்படிப்பில் இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல் நிலை தேர்வுக்கான மாணவர்கள் நுழைவுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர். தங்கும் இடமும் உணவும் இலவசமாக வழங்கப்படும். ரூ.1.00இலட்சத்திற்கு மேல் பெற்றோர் ஆண்டு வருமானம் உள்ளவர்களது மாணவர்களுக்கு உணவு கட்டணமாக மாதம் ரூ.800/– செலுத்த வேண்டும். | இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை–28. |
| 13.2 | தட்டச்சு / சுருக்கெழுத்து பயிற்சி. | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல். | வருமான வரம்பு இல்லை. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 14. வழக்கறிஞர் தொழில் தொடங்க உதவி

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 14.1 | **வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க மான்யம்**<br><br>கட்டிட வாடகை புத்தகங்கள், மரச் சாமான்கள் வாங்க சிறப்பு மான்யம் அளிக்கப்படுகிறது. | (அ) வழக்கறிஞர் பட்டம் பெற்ற ஆதிதிராவிடர் பழங்குடியினர்.<br>(ஆ) பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/—.<br>(இ) சட்டப்படிப்பினை முடித்து வழக்கறிஞராக பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குள் விண்ணப்பித்திருக்க வேண்டும். | ஒரு சட்டப் பட்டதாரிக்கு ரூ.10,000/— வீதம் வழங்கப்படும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 15. தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவி.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 15.1 | தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு உதவி. | தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு தச்சுக் கருவி / தையல் இயந்திரம் மற்றும் தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்களுக்குத் தேய்ப்பு பெட்டி வழங்குதல். | சாதிச் சான்றிதழ் வருவாய் ரூ.24,000/—க்குள் இருக்க வேண்டும். தொழிற் கல்வி படித்ததற்கான சான்றிதழ். | தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 16. சிறந்த எழுத்தாளர்களுக்கான நிதி உதவி.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 16.1 | சிறந்த எழுத்தாளர்களுக்கு ரூ.20,000/— நிதி உதவி வழங்குதல். | ➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் சிறந்த எழுத்தாற்றல் மிக்க 10 படைப்பாளிகளுக்கு நிதி உதவி வழங்குதல்.<br>➢ இவர்களை தவிர ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கும் இந்த வாய்ப்பு அளிக்கப்படும்.<br>➢ ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்/ மே மாதங்களில் செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்படும்.<br>➢ மொத்தம் 11 பேர் (10 + 1)<br>➢ ஒவ்வொரு சிறந்த நூலுக்கும் ரூ.20,000/— நிதி உதவி வழங்கப்படும். | சாதிச் சான்றிதழ். | ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை—5. |

## 17. விடுதிகள்.
## விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான சலுகைகள்.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| **17.1** | விடுதி இலவச உணவு உறைவிடம் 12ம் வகுப்பு வரை அனைவருக்கும். | ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– என உயர்த்தப் பட்டுள்ளது. பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். (இது மாணவியருக்கு பொருந்தாது) | | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| **17.2** | சீருடை | 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர் அனைவருக்கும் வருடத்திற்கு 4 ஜோடி | | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| **17.3** | சிறப்பு வழிகாட்டி | 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் அனைவருக்கும். | | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| **17.4** | பாய் மற்றும் போர்வை. | விடுதிகளில் தங்கி பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் (இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை). | | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |

## 18. தீண்டாமை ஒழிப்பு

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 18.1 | தீண்டாமை ஒழிப்பு | குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்–1955ன் மூலம் சமூகநீதி அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உறுதி செய்தல். | வன்கொடுமையால் உயிரிழந்த ஒவ்வொருவரது குடும்பத்திற்கும் ரூ.2.00 இலட்சம் இழப்பீடாக வழங்கப்படும். குடும்ப சூழ்நிலையின் அடிப்படையில் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை தேவைப் படின் வீடும், விவசாய நிலமும் வழங்கப்படும். | மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 18.2 | கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு உதவி. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்–1989 விதிகள் 1995 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளில் இருந்து பாதுகாத்தல். | கலவரங்களால் பாதிக்கப்பட்டு உயிரை இழக்கும் நபரது குடும்பத்திற்கு ரூ.2.00 இலட்சம் தீருதவியாக வழங்கப்படுகிறது. மேலும் உயிரிழந்த நபரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி அல்லது அக்குடும்பத்திற்கு ஒரு வீடும், விவசாய நிலமும் வழங்கப்படுகின்றன. | மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 18.3 | மத நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்களை தேர்வு செய்து பரிசு வழங்குதல். | மாவட்டம் தோறும் மத நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம் ஒன்றினை தேர்வு செய்து ரூ.2.00 இலட்சம் பரிசு வழங்குதல். | -- | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 19. பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 19.1 | மகளிர் சுய உதவிக்குழு | மகளிர் சுய உதவிக்குழு இந்து ஆதிதிராவிடர் இன மக்கள் 12 முதல் 20 உறுப்பினர்கள் கொண்ட குழு. | ➢ மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனம் மூலம் அமைக்கப் பட்டு, முழுவதும் ஆதிதிராவிடர் மக்களை உறுப்பினராக கொண்ட மகளிர் சுய உதவிக் குழு.<br>➢ வருமான வரம்பு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள்.<br>➢ புதிய தொழில் தொடங்கவும், பொருளாதார மேம்பாடு அடையவும். | மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 19.2 | சுழல் நிதி | சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000/- தாட்கோ மானியம் மற்றும் ரூ.40,000/- வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. | | |
| 19.3 | பொருளாதார உதவி திட்டம் | ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.5.00 இலட்சம் வரை நிதி உதவியும் அதில் 50% திட்ட செலவில் தாட்கோ மானியமாக வழங்கப்படும். 50% வங்கிக் கடன், ரூ.2.50 இலட்சம் வரை பயனாளி பங்குத் தொகை இல்லை. ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரை 5% பயனாளி பங்குத் தொகை. | | |
| **19.4** | (அ) நிலம் வாங்கும் திட்டம் | இத்திட்டத்தில் ஆதிதிராவிட மக்களின் சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு முன்னோடி திட்டமாகும். நிலமற்ற சிறு மற்றும் குரு விவசாயிகளுக்கு விவசாய நிலங்கள் சொத்துக்களாக உருவாக்கி விவசாய உற்பத்திக்கு தேவைப்படுகின்ற விவசாய உபகரணங்கள் வழங்கி உற்பத்தித் திறனை பெருக்கி வருகின்றது. | ➢ ஆதிதிராவிட மகளிர் குழுக்களுக்கு முன்னுரிமை.<br>➢ வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 18 வயது முதல் 55 வயதிற் குட்பட்ட ஆதிதிராவிட மகளிர்.<br>➢ ஆண்டு வருமானம் கிராம புறத்திற்கு ரூ.24000/- நகர் புறத்திற்கு ரூ.28,536/- | மாவட்ட மேலாளர் தாட்கோ |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | (ஆ) நிலம் வாங்கும் திட்டம் | இத்திட்டத்தில் நிலம் வாங்குவதற்காக அதிக பட்சமாக ரூ.1.00 இலட்சமாகும். அத்தொகையில் 50% மானியமாகவும் 50% வங்கிக் கடனாகும். இத்திட்டத்தில் முத்திரைத் தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100% விலக்கு அளிக்கப்படுகிறது. | ➢ சாதிச்சான்று.<br>➢ குடும்ப அட்டை.<br>➢ பயனாளிகள் 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.5 ஏக்கர் வரை நஞ்சை நிலம் சொத்தாக வாங்கலாம். | மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 19.5 | (இ)நில அபிவிருத்தித் திட்டம். | இத்திட்டத்தில் நில அபிவிருத்தி நீர்பாசனம் மற்றும் கால்நடை வளர்ப்புகளுக்காக ரூ.1.00 இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.அத்தொகையில் 50% மானியமாகவும், 50% வங்கிக் கடனாகும். பயன்பெறும் பயனாளிகளுக்கு முன்னுரிமை மற்றும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் விவசாய மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்படும். | | மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 19.6 | மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதித் திட்டம். | 100% மான்யமாக வருவாய் ஈட்டும் வகையில் தலா ரூ.10,000/— மானியம் வழங்கப்படும். | இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த கொத்தடிமைகள், விதவைகள், ஊனமுற்றோர்கள் ஆதரவற்றோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | மாவட்ட ஆட்சியர் / மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 19.7 | தனி நபர் கடன் | தனி நபர் கடன் அதிகபட்சம் ரூ.7.50 இலட்சம் தாட்கோ மான்யம் 30% மீதம் வங்கிக் கடன் (பருவக் கடன்) ரூ.1.00 இலட்சம் வரை பயனாளி பங்குத் தொகை இல்லை. ரூ.1.00 இலட்சத்திற்கு மேல் 5% பயனாளி பங்குத் தொகை. | ➢ வயது வரம்பு 18முதல்55 வரை (ஆதி திராவிடர்)<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் கிராமப் புறத்தில் ரூ.24,000/— நகர்புறத்தில் ரூ.28,536/—<br>➢ குடும்ப அட்டை.<br>➢ சாதிச்சான்று. | மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 19.8 | குடிமைப்பணி முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதி உதவி அளித்தல். | ஆதிதிராவிட இளைஞர்கள் குடிமைப் பணி தேர்வுகளில் பங்கேற்பதை ஊக்குவிக்க, குடிமைப் பணி முதல்நிலை தேர்வில் வெற்றி பெற்று இறுதித் தேர்வுக்கு தயார் செய்ய நபர் ஒருவருக்க ரூ.25,000/— நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்தொகையில் ரூ.15,000/— புத்தகங்கள் வாங்கவும், ரூ.10,000/— இடைநிகழ் செலவிற்காகவும் வழங்கப்படுகிறது. | ➢ சாதிச்சான்று.<br>➢ இந்தியக் குடிமைப் பணி (முதன்மை) தேர்வு பெற்றதற் கான சான்று.<br>➢ இந்தியக் குடிமைப் பணி (பிரதான) தேர்வில் பங்கு பெறவிருப் பதற்கான சான்று (விருப்பப் பாடங்கள் I&II குறிப்பிடவும்.<br>➢ வருமான சான்று. | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை—101. |

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 19.9 | ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் (SEPY) | மாவட்டத்திற்கேற்ற தகுதி வாய்ந்த சுயவேலை வாய்ப்பு அளிக்க கூடிய திட்டங்களை தேர்வு செய்து தகுதிவாய்ந்த ஆதிதிராவிட இளைஞர் களுக்கு தேவையான பயிற்சியுடன் கடன் உதவி வழங்கும் திட்டம். இதில் தாட்கோ மான்யமாக ரூ.30% வழங்கப்படுகிறது. | ➢ வயது வரம்பு 18 முதல் 35 வரை இருத்தல் வேண்டும்.<br>➢ குடும்ப அட்டை.<br>➢ சாதிச் சான்று. | மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| **19.10** | தொழில் கல்வி பயிற்சித் திட்டம். | ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு ஆயத்த ஆடை வடிவமைப்பு கணினி சார்ந்த பயிற்சி, உணவு தயாரித்தல், திரைப்படம் சார்ந்த பயிற்சி ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி, காலணி தயாரித்தல், கனரக வாகனம் இயக்குதல், ஜே.சி.பி. பொக்லைன் இயக்குதல் பயிற்சி மற்றும் பல பயிற்சிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவசமாக வழங்கப்படுகிறது. | ➢ வயது 15 முதல் 35 வரை ஆதி திராவிடர் இளைஞர்கள்.<br>➢ சாதிச்சான்று.<br>➢ குடும்ப அட்டை. | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

## 20. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்.

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 20.1 | தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம். | தூய்மைப்பணி புரிவோரது பொருளாதாரம் மற்றும் கல்வியையும் மேம்படுத்த தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் ஒன்று 11.06.2007–ல் அமைத்து செயல்பட்டு வருகிறது. | அனைத்து இனத்தவரும் தமிழ்நாடு தூய்மை பணிபுரிவோர் நல வாரியத்தில் உறுப்பினராகலாம், தூய்மைப் பணி புரிவோராக இருத்தல் வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101 / மாவட்ட மேலாளர், தாட்கோ. |

## 21. வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 21.1 | இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் | இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப்புறத்தில் 3 சென்டும், நகராட்சி பகுதியில் 1½ சென்டும், மாநகராட்சி பகுதியில் 1 சென்டும் வழங்கப்படுகிறது | ➢ வீட்டுமனை சொந்தமாக இருக்கக் கூடாது.<br>➢ ஆண்டு வருமான வரம்பு கிராம பகுதியில் ரூ.40,000/– நகரப் பகுதி களில் ரூ.60,000/– | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அல்லது தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) |
| 21.2 | வீடுகள் கட்டித்தரும் திட்டம் | இந்திரா அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள்கட்டித்தரப் படுகின்றன. | ➢ வீடு இல்லாதவர் களுக்கு மட்டும்<br>➢ மனைப்பட்டா வைத்து இருக்க வேண்டும் | சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தலைவர்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. |
| 21.3 | குடிநீர் வசதி | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் இடங்களில் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து தருதல் | ➢ குடிநீர் வசதி இல்லாமை | 1) கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்<br>2) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்<br>3) ஊராட்சி ஒன்றிய ஆணையர் |
| 21.4 | மயானம் | மயானம் மற்றும் மயானத்திற்கு செல்லும் பாதை வசதிகள் செய்து தருதல். | ➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்பு களுக்கு மயானம் இல்லாமை.<br>➢ மயானம் இருந்தால் அதற்கு பொது பாதை வசதி இல்லாதது | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| 21.5 | இணைப்புச் சாலை | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து தருதல் | ➢ குடியிருப்பு களுக்குச் செல்ல இணைப்புச் சாலை இல்லாமை | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் நல அலுவலர் |

| | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 21.6 | சமுதாய நலக்கூடங்கள் | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமுதாய நலக்கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன | ➢ சமுதாய நலக்கூடங்கள் இல்லாத ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகள் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 21.7 | ஈமச்சடங்குக்கு உதவி | ஏழ்மை நிலையில் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் அந்த ஈமச்சடங்கிற்கு ரூ.2500/– மான்யமாக அளிக்கப்படுகின்றது. | ➢ இறந்தவர் களின் குடும்ப ஆண்டு வருமானவரம்பு ரூ.24000க்குள் இருக்க வேண்டும். | ஆணையர், ஊராட்சி ஒன்றியம்/ செயல் அலுவலர், பேரூராட்சி / ஆணையர், நகராட்சி / மாநகராட்சி/ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 22. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்

| | திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 22.1 | ஆதிதிராவிடர் இனத்தின் உட் பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணாரின மக்களது பொருளாதாரம் / கல்வியை மேம்படுத்த தமிழ்நாடு புதிரை வண்ணார் நலவாரியம் ஒன்று 15.10.2009–ல்அமைத்து செயல்பட்டு வருகிறது. | ➢ புதிரை வண்ணார் சாதியினர்<br>➢ ‘தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்<br>➢ சலவைத் தொழில் செய்ய வேண்டும்.<br>➢ 18 வயது முதல் 60 வயது உடையவராக இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

## 23. கொத்தடிமை ஒழிப்புத்திட்டம்

| | திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 23.1 | **கொத்தடிமை ஒழிப்பு**<br><br>கொத்தடிமைமுறை ஒழிப்புத் திட்டம், கொத்தடிமையாக உள்ள எல்லா இனத்தவரும், தமிழகத்திலும், இதர மாநிலத்திலும் கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்டவர்கள்.<br><br>கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், ரூ.1000/– உடனடி நிவாரணத் தொகையாகவும், பின்னர் அவர்களது சுய தொழில் தொடங்க ரூ.19,000/– மறுவாழ்வு நிவாரண நிதியாகவும் 01.04.2000 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் 50:50 பங்குத் தொகையில் செயல்படுத்தப்படுகின்றன. | ➢ சாதி, மத பேதமில்லை<br>➢ விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் அனைவரும் | மாவட்ட ஆட்சியர்/ சார் ஆட்சியர் / கோட்டாட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

# பழங்குடியினர் நலத்துறை

| திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 1. தோட்டக்கலை மேம்பாடு | ரூ.1000 பெறுமானமுள்ள மரக்கன்றுகள், விதைகள், உரம் இலவசமாக வழங்கப்படுகின்றன | பழங்குடியினர் ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை |
| 2.பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம் | மல்பரி தோட்டம் ஏற்படுத்தவும் பட்டுப்புழு வளர்க்கவும் முழு மான்யம் அளிக்கப் படுகிறது. | பழங்குடியினர் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை |
| 3. சிறிய நீர்ப்பாசனத் திட்டம் | பழங்குடியினர் அதிகம் நிலம் வைத்திருக்கும் பகுதிகளில் சிறிய நீர்த்தேக்க அணை போன்றவை ஏற்படுத்தப்படுகின்றன. | பயன்பெறுவோரில் 50% மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொதுப் பணித்துறை. |
| 4 கால்நடை பராமரிப்பு | ஆடுகள், கறவை மாடுகள், கன்றுகள் வாங்கி வளர்க்க முழு மான்யம் வழங்கப்படும். கால்நடை களுக்கு மருத்துவ வசதி, கருவுருத்தல் போன்றவைகளும் செய்யப்படுகின்றது. | பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை ஆய்வாளர் |
| 5. விவசாய நில மேம்பாடு | மலைச்சரிவில் உள்ள நிலத்தை மழை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தல் இவை முழுவதும் இலவசமாக செய்து தரப்படுகின்றது. | நிலமுடைய பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை. |
| 6. தேனி வளர்ப்பு | தேன் சேகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க 10 தேன் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. | மலை, காடு பகுதிகளில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியம் |
| 7. வனவளப்பாதுகாப்பு | வனவளத்தை அதிகரிக்க செடிகள் வழங்குதல், அந்த செடிகளைப் பராமரிக்க ஊக்கத்தொகை வழங்குதல் | வனப்பகுதியில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர் |

| திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 8. பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கம் | பழங்குடியினருக்கு வட்டியில்லாக்கடன் வழங்க, அவர்கள் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்க, அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருள்களை நியாய விலையில் வழங்க, விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்ய, பொருளாதாரத் திட்டங்களுக்கு கடன் போன்றவை பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMP) மூலம் வழங்குதல். | பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர்/ தனி அலுவலர், சம்பந்தப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் |
| 9. தெருவிளக்கு அமைத்தல் | பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல் | தெருவிளக்கு இல்லாத குடியிருப்பு | கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம்/ ஆணையர், ஊராட்சி ஒன்றியம். |
| 10. இணைப்புச் சாலைகள் அமைத்தல் | பழங்குடியினர் குடியிருப்புகளை முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்தல் | தற்பொழுது சாலை வசதி இல்லாத கிராமம் | ஆணையர், ஊராட்சி ஒன்றியம் / கண்காணிப்பு பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத்துறை / மாவட்ட ஆட்சியர். |
| 11. இலவசமாக வீடுகள் கட்டித்தருதல் | மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல் | வீட்டுமனை உள்ள பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் |
| 12. வேலைவாய்ப்பு ஆலோசனைகள் | பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்குரிய உதவிகள், ஆலோசனைகள் நல்க ஒரு தொழில் நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது. | பழங்குடியின இளைஞர்கள் | தனிவேலை வாய்ப்புக்கான ஆலோசனை மையத்தி லுள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம். |

| திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| **13.** வேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல் | போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல். | பழங்குடியின கல்வி பயின்ற இளைஞர்கள் | பயிற்சிக்கான வழிகாட்டிக்கு தொடர்புடைய மாவட்ட வேலை வாய்ப்பு மையங்கள் |
| **14.** பெண்கள் முன்னேற்றத்திற்கு பயிற்சி அளித்தல் | பழங்குடியின பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி, மூங்கில் கூடைமுடைதல் போன்ற பயிற்சி அளித்தல். | பழங்குடியின பெண்கள் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர். |
| **15.** மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் | நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தருதல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, உண்டி உறைவிடப் பள்ளிக்கு குடிநீர் வசதி, கூடுதல் கட்டட வசதி, சமுதாயக்கூடம், கணினிகள், வாகன உரிமம், பாதை வசதி அளிப்பது முதலியவை | ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் | திட்ட அலுவலர் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நீலகிரி மாவட்டம். |
| **16.** மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | பழங்குடியினர்கள் வசிக்கும் மாவட்டங்கள், சுற்றுச்சுவர் மற்றும் தடுப்புச்சுவர் வகுப்பறைகள், உண்டி உறைவிடப்பள்ளி களுக்கு சமையல் கூடம், பாதை வசதி, குடிநீர்வசதி, தெருவிளக்குகள் முதலியன | ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் | மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட ஆதி (ம) பந அலுவலர்<br>1. கன்னியாகுமரி<br>2. திருநெல்வேலி<br>3. விருதுநகர்<br>4. மதுரை 5.தேனி<br>6.திண்டுக்கல்<br>7. கோயம்புத்தூர்<br>8. திருப்பூர்<br>**9.** ஈரோடு<br>மாவட்டங்கள் |

## 17. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 6 அலுவலர் மற்றும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் பழங்குடியினர் ஒட்டுமொத்த சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் நாடு பழங்குடியினர் நல வாரியத்தின் திட்ட உதவிகள்

| சலுகை | தகுதி | |
|---|---|---|
| **1.** விபத்துக் காப்பீட்டுத் திட்டம்<br>அ.விபத்து இறப்பு ரூ.1,00,000/- | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | |
| **2.** விபத்து ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- வரை | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | |
| **3.** இயற்கை மரண உதவி ரூ.5,000/- | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | |
| **4.** ஈமச்சடங்கு உதவி ரூ.2,000/- | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | |
| **5.** கல்வி உதவித் தொகை | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக உளளவர்களின் குழந்தைகளுக்கு | |
| **6.** 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | ரூ. | 1000/– |
| **7.** 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் | ரூ. | 1000/– |
| **8.** 11ம் வகுப்பு படித்துவரும் (பெண்களுக்கு மட்டும்) | ரூ. | 1000/– |
| **9.** 12ம் வகுப்பு படித்துவரும் (பெண்களுக்கு மட்டும்) | ரூ. | 1500/– |
| **10.** 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் | ரூ. | 1500/– |
| **11.** முறையான பட்ட படிப்பிற்கு | ரூ. | 1500/– |
| **12.** விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. | 1750/– |
| **13.** முறையானபட்டமேற்படிப்பிற்கு | ரூ. | 2000/– |
| **14.** விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. | 3000/–(முறையான பட்டமேற்படிப்புக்கு) |
| **15.** தொழில் நுட்பப் பட்டபடிப்பு | ரூ. | 2000/– |
| **16.** விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. | 4000/– (தொழில் நுட்ப படிப்புக்கு) |
| **17.** தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பிற்கு | ரூ. | 4,000/– |
| **18.** விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. | 6,000/–(தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு) |
| **19.** ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு | ரூ. | 1,000/– |
| **20.** விடுதியில் தங்கிப் படித்தால் ) | ரூ. | 1,200/–(ஐ.டி.ஐ. அல்லது பல்தொழில் பயிற்சி படிப்புக்கு ) |

| | |
|---|---|
| **21.** திருமண உதவி ரூ.2,000/- | பழங்குடியினர் வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் |
| **22.** மகப்பேறு உதவி மாதம் **1**-க்கு ரூ1,000/- வீதம் **6** மாதங்களுக்கு ரூ. 6000/– மட்டும். | |
| **23.** கருச்சிதைவு/கருக்கலைப்பு ரூ.3,000/- | |
| **24.** கண் கண்ணாடி வாங்கிட உதவி ரூ.500/-க்கு மிகாமல் | |
| **25.** முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ. 500 | |

மேற்குறிப்பிட்ட திட்ட உதவிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை அணுக வேண்டும்.

மேற்படி நல வாரியத்தில் **25.05.11** அன்றைய நிலையில் **28997** உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு இதில் **24896** உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் **915** நபர்களுக்கு ரூ.**33.58** இலட்சம் மதிப்பில் நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரிய திட்ட உதவிகள்

**அரசாணை பலவகை எண்.71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.11.06.07ல் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தூய்மைப்பணி புரிவோர் நல வாரியம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் 12 அலுவல் சார் உறுப்பினர்களும் 13 நபர்கள் அலுவல் சாரா உறுப்பினர்களும் உள்ளனர்.**

தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளும் அனைவரும் பின்வரும் நலத்திட்ட விதிகள் பெறத் தகுதியுடையவராவர். தமிழ்நாடு தூய்மைப் பணி புரிவோர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளுதல், நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றிற்காக சம்பந்தப்பட்ட தாட்கோ மாவட்ட மேலாளரை அணுக வேண்டும்.

| **வ.எண்** | | **திட்ட உதவிகள்** | **உதவித்தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1 | | **விபத்துக்காப்பீட்டுத்திட்டம்** | |
| | | (அ) விபத்து இறப்பு | 1,00,000/- |
| | | (ஆ) விபத்து ஊனம் | 10,000/-முதல் 1,00,000 வரை |
| 2 | | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | 15,000/– |
| 3 | | ஈமச்சடங்கு உதவி | 2,000/– |
| 4 | | **கல்வி உதவித்தொகை** | |
| | அ | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ | 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 1,500/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,750/- |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 3,000/- |
| | ஏ | தொழில் நுட்பப்பட்டப்படிப்பு | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/- |
| | ஐ | தொழில் நுட்பப்பட்ட மேற்படிப்பு | 4,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/- |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,200/- |
| 5 | **திருமண உதவி** | | 2,000/- |
| 6 | **மகப்பேறு உதவி** | | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் | 6,000/- |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிட உதவி | | 500/–க்கு மிகாமல் |
| 8 | முதியோர் ஓய்வூதியம் | | 500/– |

**19. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்:**

**அரசாணை பலவகை எண்.114, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.25.10.09ல் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் தமிழ்நாடு புதிரை வண்ணார் நலவாரியம் அமைக்கப்பட்டது. அதில் 12 அலுவல் சார் உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் உள்ளனர்.**

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளும் அனைவரும் பின்வரும் நலத்திட்ட உதவிகள் பெறத் தகுதியுடையவராவர்.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளுதல், நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றிற்காக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை அணுக வேண்டும்.

| **வ.எண்** | **திட்ட உதவிகள்** | | **உதவித்தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1 | **விபத்துக்காப்பீட்டுத்திட்டம்** | | |
| | (அ) விபத்து இறப்பு | | 1,00,000/- |
| | (ஆ) விபத்து ஊனம் | | 10,000/-முதல் 1,00,000/-வரை |
| 2 | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | | 15,000/– |
| 3 | ஈமச்சடங்கு உதவி | | 2,000/– |
| 4 | **கல்வி உதவித்தொகை** | | |
| | அ | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ | 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 1,500/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,750/- |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 3,000/- |
| | ஏ | தொழில் நுட்பப்பட்டப்படிப்பு | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/- |
| | ஐ | தொழில் நுட்பப்பட்ட மேற்படிப்பு | 4,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/- |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,200/- |
| 5 | **திருமண உதவி** | | 2,000/- |
| 6 | **மகப்பேறு உதவி** | | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் | 6,000/- |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிட உதவி | | 500/–க்கு மிகாமல் |
| 8 | முதியோர் ஒய்வூதியம் | | 500/– |